# அரசுதரப்பாலும் தொண்டமானுக்கு நெருக்கடி!

(கொழும்பு)
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக, அரசுத் தரப்பிலும் பல நெருக்கடிகள் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு-கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரித்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 13 இதழ் 321
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28 — 12 — 1992

## தமிழ் கட்சிகள் தொண்டா சந்திப்பு

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமானை கடந்த சில தினங்களுக்கு முன் தமிழ்க்கட்சி பிரதிநிதிகள் சந்தித்து பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
தெளிவுக் குழுவிலிருந்து
(4-ம் பக்கம் பார்க்க)

## வன்னி மாவட்டத்தில் 'ஒபரேஷன் தங்கச் சுரங்கம்'

(கொழும்பு)
வவுனியா மாவட்டத்தில் 'ஒபரேசன் தங்கச் சுரங்கம்' என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாககூட்டுப் படைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.
4-ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு-கிழக்கில்

# சமாதானம் தோன்றுவதற்கான அறிகுறியே தென்படவில்லை!

## பி. பி. ஸி. கூறுகிறது

(கொழும்பு)
1992ம் ஆண்டு முடிவுறும் வேளையிலும் அரச படைகளுக்கும், புலிகளுக்குமிடையிலான போர், எதுவித முடிவுமின்றித் தொடர்ந்துகொண்டு இருப்பதாகவும், சமாதானத் தீர்வு தோன்றுவதற்கான அறிகுறியே இல்லை எனவும் பி. பி. ஸி. விமர்சித்துள்ளது.

பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல வருடங்களாக வடக்கு-கிழக்கு போர் வெற்றி - தோல்வியற்ற நிலையில் எதுவித தீர்வுமின்றி தொடர்ந்து கொண்டிருக்கிறது. அரசியல் ரீதியில் பிரச்னையை தீர்க்க நாடாளுமன்ற தெரிவுக் குழு ஓராண்டு முயற்சித்த போதும் பெரும் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

எல்லேசரும் தெரிவுக்குழுவின் முடிவை எதிர்பார்த்ததால் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமென்ற புலிகளின் குரல் செவிசாய்க்கப்படவில்லை.

அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் இரகசிய பேச்சுக்கள் நடைபெறுவதாக பல
4ம் பக்கம் பார்க்க)

## யுத்த ஏற்பாடுகளில் அரசு தீவிர அக்கறை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் சமாதான முயற்சிகள் ஏதும் தென்படாததாலும் தெரிவுக்குழுவின் முயற்சி தோல்வியடைந்துள்ளதாலும் யுத்தம் தொடரும் சாத்தியமே பெருமளவில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அரசு அடுத்த வருடம் இந்த யுத்தத்திற்காக தன்னை நன்கு தயார்ப்படுத்தி வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

அரசு ஆயுதக் கொள்வனவிலும் இராணுவத்தினருக்
(4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கூட்டிற்கு எதிரணி முயற்சி

(கொழும்பு)
நாட்டில் திடீர் தேர்தல் ஒன்றை சந்திப்பதற்காக எதிர்கட்சிகள் தமக்கிடையே கூட்டு ஒன்றை ஏற்படுத்த தீவிரமாக முயற்சித்து வருகின்றன.
கடந்தவாரம் கூடிய சுதந்
(4-ம் பக்கம் பார்க்க)

## பி.ஜே.பி. எம்.பி.க்கள் பதவி விலகமாட்டார்கள்

(புதுடில்லி)
இந்தியாவில் உடனடியாக இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்கான ஒரு நிலையை உருவாக்குவதற்காக, பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த லோக்சபா உறுப்
(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவு
## 94 மாணவர்கள் "4 ஏ" சித்திபெற்றனர்

(கொழும்பு)
கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவு இன்று கொழும்பில் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சென்ற வருடத்தோடு ஒப்பிடும் போது இந்த வருடம் 6.7 சதவீதமானோர் கூடுதலாக சித்தியடைந்துள்ளனர். 94 பரீட்சார்த்திகள் நான்கு பாடங்களிலும் திறமைச் சித்தி (4 ஏ) பெற்றிருக்கின்றார்கள்.

இவர்களில் 44 பேர் பொறியியல்துறையிலும் 30 பேர் மருத்துவப்பிரிவிலும் '4 ஏ'
(4-ம் பக்கம் பார்க்க)

## சகடை விமானம் வலி.மேற்கில் நோட்டம்

(வட்டுக்கோட்டை)
நேற்றுக் காலை 10-00 மணியளவில் சகடை விமானம் ஒன்று, பண்டத்தரிப்பு, சங்கானை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சுழிபுரம் முதலான இடங்களைச் சுற்றி வட்டமிட்டதை அடுத்து மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

இந்த விமானம் சென்ற சிறிது நேரத்தின் பின்னர், மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர், சில்லாலை, சுழிபுரம் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். ஷெல்கள் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (139)

## கிழக்கில் புலிகள் அச்சுறுத்தல் பல முகாம்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் வீதிக்கு வீதி அமைக்கப்பட்டிருந்த பல காவல் முகாம்கள் மூடப்பட்டுவருகின்றனவாம்.

கிழக்கில் புலிகளின் தாக்குதல், அச்சுறுத்தல்களையடுத்து பொலிஸாரின் பல சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளன. பல காவல் முகாம்கள் மூடப்பட்டு ஒருசில இடங்களிலே தற்போது பல படையினரைக் கொண்ட முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறிய முகாம்கள் பல அண்மைக் காலங்களில் புலிகளின் கடும் தாக்குதலுக்கிலக்காகி வந்ததையடுத்தே இவ்வாறு காவல் முகாம்கள் மூடப்பட்டு வருகின்றனவாம். (சி)

## அ.தி.மு.க. தனித்தே தேர்தலில் போட்டியிடும்

(சென்னை)
தமிழகத்தில் விரைவில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் அ. தி. மு. க. தனித்தே போட்டியிடுமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இத்தேர்தல்களில் காங்கிரஸுடன் தேர்தல்கூட்டு இல்லையெனவும் முதல்வர் அறிவித்துள்ளார்.

தமது கட்சியை காங்கிரஸ் கட்சி சரியான முறையில் நடத்தவில்லை எனவும் முதல்வர் குற்றம் சாட்டினார். (சி)

## அடுத்து வரும் மாதங்களில் யுத்தம் மோசமடையலாம்?

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் அடுத்து வரும் மாதங்களில் யுத்தம் தீவிரமடையக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்துவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது விடுதலைப் புலிகளின் கை ஓங்கியிருப்பதை எப்படியாவது முறியடித்து புலிகளுக்கு மேலாக இராணுவ
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla Capsules கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-7095]


## மக்கள் அஞ்சலி

(பளை)

மணலாறு மாவட்டத்தில் வீரச்சாவு அடைந்த மேஜர் செங்கோலனுக்கு எழுதுமட்டுவாள், பளை ஆகிய இடங்களில் நேற்று பெருந்திரளான மக்கள் மலர்வலயம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பளைப் பகுதி எங்கும் ஒலிபெருக்கிமூலம் சோக கீதம் இசைத்து அஞ்சலி செய்யப்பட்டது. [156]

## தொழுநோய் ஆய்வு

[பண்டத்தரிப்பு]

சங்கானை கலாச்சார மண்டபத்திலுள்ள அசுதிமுகாமில் சுகாதாரப் பகுதியினரால் தொழுநோய் ஆய்வு இம்மாதம் 28ம் திகதி நடாத்தப்படவுள்ளது. (72)

## சீருடைகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு எதிர்வரும் 1993ம் ஆண்டுக்கு சீருடைகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையினால் கோரப்பட்டுள்ளன.

அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் தங்கள் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தேவையான சீருடைகள் பற்றிய விபரங்களை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் இப்பணிமனைக்கு தயாரித்து அனுப்பி வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. 72

## இராசி பலன்

**28-12-1992**

**(தமிழுக்கு மார்கழி 13)**

**திங்கட்கிழமை**

சதுர்த்தி மு. ப. 11-46 வரை அவிட்டம் மு. இ. 11-14 வரை இராகுகாலம் காலை 7-58 முதல் 9-28 வரை சுபநேரம் பகல் 12-28 முதல் 1-28 வரை சித்தயோகம்.

மேடம்: சந்தோஸ மிகுதி, நன்மதிப்பு, வஸ்திரலாபம்.

இடபம்: இனசன கொண்டாட்டம், அதிகாரம், கல்வியால் சிறப்பு.

மிதுனம்: சத்துருபயம், பணக்குறைவு, தொழில் அலைச்சல்.

கடகம்: பயனற்ற பிரயாசம், நிலைப்பிரிவு, வீண்பழி கேட்டல்.

சிங்கம்: பெரியோர் மதிப்பு, அதிக செலவு. இல்லச் சிறப்பு

கன்னி: நற்கீர்த்தி, போசன நிறைவு. பொதுஜன உதவி.

துலாம்: நடைக்கஸ்டம், பயணதுன்பம், மனவேதனை

விருச்சிகம்: மனச்சஞ்சலம், ஏமாற்றப்படல், யோசனை.

தனுசு: புதியவர் உறவு, புத்திரர் சுகம், வாக்குவன்மை

மகரம்: தூக்கக்குறைவு, பந்துக்கள் கவலை, மனவெறுப்பு

கும்பம்: நண்பர் வருகை, காரிய திறமை, வெளியூர்த்தகவல்.

மீனம்: வாக்கு கலகம், காரியதடை, பிறருக்கு கட்டுப்படுதல்.

— ஜோதிடர்

## கறுவா எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் கறுவா எண்ணெயின் சந்தை விலை 1,400 ரூபாவைத் தாண்டியுள்ளது.

இந்த விலை உயர்வினால் கறுவா உற்பத்திசெய்பவர்கள் அதிக லாபத்தை சம்பாதிக்கக்கூடியதாகவுள்ளது என்று கூறப்படுகின்றது. (சு)

## அடையாள அட்டை

(பளை)

பளைச் சந்தைப் பகுதியில் செல்வமணி கதிரேசன் இயக்கச்சி கோவில் வயல் இல 505403169 V என்னும் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு பளை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும். [156]

## சித்தி

(நெல்லியடி)

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் துன்னாலை சிவப்பிரகாச வித்தியாசாலையில் 16 மாணவர்களும் பருத்தித்துறை சித்திவிநாயக வித்தியாலயத்தில் 04 மாணவர்களும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 06 மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர். (160)

# மாவட்ட செயலகத்தின் முக்கியத்துவம் தொடரும்

## திட்டமிடல் அமைச்சு அறிவிப்பு

(மானிப்பாய்)

மாவட்ட செயலகத்தின் முக்கியத்துவம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சு அறிவித்துள்ளது.

நிர்வாகரீதியான அதிகாரப் பங்கீட்டின் கீழ் முழுமையாக பிரதேச செயலகங்கள் நிறுவப்பட்ட பின்னரும் மாவட்ட நிர்வாகத்தின் முக்கியத்துவம் அவசியமாக இருக்குமென கொள்கைத்திட்டமிடல் செயற்படுத்தும் அமைச்சின் பொது முதலீடு 1992, 1996 என்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுளது.

மாவட்ட அடிப்படையில் தேர்தல் தொகுதிகள் அமைந்துள்ளதாலும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட இணைப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு என்பன தொடர்ந்தும் மாவட்ட அடிப்படையில் நடைபெறுமாதலால் மாவட்டங்கள் தொடர்ந்தும் நிர்வாக அடையாளம் பெற்றதாக அமையும்.

மேலும் கச்சேரி அரசாங்க அதிபர் என்ற பெயர்களில் மாற்றங்கள் பிரேரிக்கப்பட்டுள்ள பொழுதிலும் மூத்த அதிகாரி ஒருவர் மாவட்ட செயலகத்திற்குப் பொறுப்பாக இருப்பார். இவரின் பங்கானது மாவட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதாக அமையுமானதும் மேற்பார்வை அபிவிருத்தி முன்னேற்றம் கட்டுப்பாடுகள் அவர் கையிலேயே இருக்கும்.

மாவட்ட செயலாளருக்கு திட்டமிடல் அபிவிருத்தி நடவடிக்கைப் பிரிவிலும் முன்னேற்றக் கட்டுப்பாட்டுக் கொள்கையிலும் துணைக்கரமாக கொள்கைத் திட்டமிடல் பணிமனை அமையும்.

இவ்வாறு மேற்படி அமைச்சினால் குறிப்பிடப்பட்டுள்ளது. (71)

# திருட முயன்ற மாணவர்கள் பொதுமக்களிடம் சிக்கினர்

(கொழும்பு)

தென்பகுதியில் வத்தேகம, கும்பே என்ற இடத்தில் எரிபொருள் நிலையத்தைக் கொள்ளையிட முயன்ற இரு மாணவர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

கைக்குண்டுகள், ரிவோல்வர்கள் சகிதம் குறிப்பிட்ட எரிபொருள் நிலையத்திற்கு அண்மையில் சென்ற இரு மாணவர்களும் முகாமையாளரைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி ஒன்பதினாயிரம் ரூபா பணத்தை அபகரித்துக் கொண்டு வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளையும் பறித்து அதைச் செலுத்திக் கொண்டு செல்ல முயற்சித்த போது பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். (க)

# அதிபர் பதவிகளுக்கு மேலும் பலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபர் தரம் I, II, III ஆகிய பதவிகளுக்கு மேலும் பலர் நியமிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான நேர்முகப் பரீட்சைக்கு விரைவில் அழைக்கப்படவுள்ளதாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவிகளுக்குக் கடைசியாக நடைபெற்ற பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# நிர்வாக சேவை பரீட்சை திகதி நிர்ணயிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

1990ம் ஆண்டுக்கென நடத்தப்படவிருந்த இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் நடைபெறமாட்டாது என்று தெரிகிறது.

இப்பரீட்சை 1992 டிசம்பர் மாதம் நடைபெறுமென்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், இப்பரீட்சை நடைபெறும் தினம் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

ஆயினும் இப்போட்டிப் பரீட்சை 1993 ஜனவரி மாதம் 30ம் திகதி நடைபெறலாம் என்று கூறப்படுவதால், கொழும்பு செல்லவிருக்கும் யாழ். அரச அதிபர், இப்போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைக் கொண்டுவருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பரீட்சையை யாழ். மாவட்டத்திலும் நடாத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் யாழ். கல்விப்பணிப்பாளரை வேண்டியுள்ளனர். கல்விப்பணிப்பாளர் இதுவிடயமாக கொழும்பு உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். [161]

## வெற்றிடம்

(மானிப்பாய்)

இலங்கை புகையிரத திணைக்களத்தில் சந்தைப்படுத்தும் முகாமையாளர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 1993ம் ஆண்டு ஜனவரி 25-ம் திகதியாகும். முழு விபரங்களுக்கும் இம்மாதம் 24-ம் திகதி வெளிவந்த வர்த்தமானியைப் பார்வையிடலாம். (71)

## சீருடை விநியோகம்

(திருநெல்வேலி)

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணிகள் பாடசாலை ஆரம்பமானவுடன் வழங்கப்படவுள்ளது.

இதற்கான துணிகள் குமண கப்பல்மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது. அடுத்தவருடம் தை மாதம் 4-ம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. (157)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அமரர் டாக்டர் ஜே. பி. லி. பிலிப் ஞாபகார்த்தசபையினர் விளையாட்டுக் கழகங்களிடையே இம்மாதம் 30-ந் திகதி புதன்கிழமை இரு உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்விரு போட்டிகளின் முதலாட்டத்தில் பாடும்மீன் கழகமும் சென். நீக்கலஸ் கழகமும் மோதும். 2-வது ஆட்டத்தில் சென். மேரிஸ் கழகமும் சென். அன்ரனிஸ் கழகமும் மோதுகின்றன. (வி)

# திருமுறைகளை ஓதுவதால் அமைதியை பெற்றிடலாம்

(யாழ்ப்பாணம்)

இறைவனிடம் உண்மையான பக்தி கொண்டு திருமுறைகளை ஓதுவதால் மன அமைதி பெற்றுவிடலாம். தேன்சுவை சொட்டும் மணிவாசகர் அருட்பாக்களை நாம் முறையாக ஓதி அதன் பயனைப் பெறவேண்டும். வருங்காலச் சந்ததிக்கும் இந்த வழியை நாம் காட்டவேண்டும் என்று நல்லைக் குருமணி பரமாசாரிய சுவாமிகள் சங்கானை வெளவில் முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் விழாவிற்கு ஆசியுரை வழங்கும் போது குறிப்பிட்டார்.

முன்னாள் கல்வி அதிகாரி திரு மு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சி. மகாலிங்கம் (சொக்கன்) திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம், திரு. தி. சிவதெட்சணமூர்த்தி ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

கல்விபதிகாரி திரு. சு. கணபதிப்பிள்ளை தலைமையில் பல ஓதுவார்கள் திருவாசக முற்றோதலில் பங்குபற்றினர். தேவஸ்தான முகாமையாளர் திரு. க. சண்முகதாசன் நன்றி கூறினார்.

## ஆய்வுகூட பரிசோதனை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான ஆய்வு கூடப்பரிசோதனைகள் வாரத்தில் இருநாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதி சனிக்கிழமைகளில் மாத்திரம் இடம்பெற்றுவந்த நோயாளர்களுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள் தற்போது பிரதி புதன்கிழமைகளிலும் நடைபெற்று வருகின்றன. (52)

# தெகிவளையில் தீவிபத்து 22 வீடுகள் நாசம்

(கொழும்பு)

தெகிவளையில் மீனவர்களுக்குச் சொந்தமான 22 வீடுகள் தீ விபத்துக் காரணமாக சேதமடைந்துள்ளன.

இதனால் 30 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடி உபகரணங்கள், தொலைக்காட்சி வானொலிப் பெட்டிகள் ஏனைய வீட்டுத் தளபாடங்கள் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலரிடம் உடுத்த துணி மட்டும் எஞ்சியுள்ளன என்றும், அந்த இடத்தைப் பார்வையிடச் சென்ற அமைச்சர் குழு எரிந்த வீடுகள் திருப்பிக் கட்டித்தரப்படும் என்று உறுதிமொழி வழங்கியுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

## இன்றைய உதைபந்தாட்டம்

(நெல்லியடி)

யாழ். மிட் ரவுண் ஹேட்டறக், கழகம் நடாத்தும், உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும். இதில் குருநகர் பாடும்மீன் எதிர்த்து பாஷையூர் அன்ரனீஸ் அணி மோதவுள்ளது. (160)

## அங்குரார்ப்பணம்

(நல்லூர்)

யாழ். மாவட்ட வர்த்தக ஊழியர் சங்கத்தின் உதைபந்தாட்டக் குழு அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது (158)

## திருமணப்பதிவு

(நெல்லியடி)

கட்டைவேலி / உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களுடன் இணைந்து அப்பகுதி வாழ் மக்களின் நலனுக்காக இலவச திருமணப் பதிவை நாளை 29ம் திகதியும், நாளைமறுதினம் 30 ம் திகதியும் நடாத்தவுள்ளனர்.

இதுவரை காலமும் திருமணத்தைப் பதிவு செய்யாது வாழ்ந்து வரும் குடும்பங்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (190)

# தமிழகத்தில் வன்முறைகள் அதிகரிப்பு வெடிகுண்டு கலாச்சாரம் தொடர்கிறது

## மாநில அரசியற் கட்சிகள் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியில் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

தமிழகத்தில் குண்டர்களின் வன்முறைச் செயல்கள் அதிகரித்து விட்டன என்றும் வெடிகுண்டு கலாசாரம் தொடர்கிறது என்றும் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அ. அ. தி. மு. க. அரசைக் குறை கூறியுள்ளார்.

தி மு க. ஆட்சியில் ஆரம்பித்த வெடிகுண்டு கலாசாரம் அ.அ.தி.மு.க. ஆட்சியிலும் தொடர்கிறது என்றும் இதற்கு எதிராக மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றபோதும் சென்னை நகரம் குண்டர்கள் ராஜ்யமாக மாறிவருகிறது என்றும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் திரு. இராமமூர்த்தி மேலும் கேட்டுக் கொண்டார்.

அ. அ. தி. மு. க. ஆட்சியில் தமிழகத்தின்பல பகுதியில் ஆளும் கட்சியினரின் அடக்குமுறை, இராஜகம் வன்முறைச்சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் குறிப்பாக இத்தாக்குதல்கள் தங்களை எதிர்க்கின்றவர்கள் மீது நடத்தப்படுகிறது என்றும் இத்தகைய செயலை தி. மு. க. வன்மையாக கண்டிக்கிறது என்று தி. மு. க. தலைமைநிலைய செயலாளர் ஆற்காடு வீராச்சாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய அரசே வேலியே பயிரை மேய்வதைப்போல சட்டத்தை மீறுகின்றது என பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் குறைகூறியுள்ளார்.

அ. அ. தி. மு. க. ஆட்சியின் மாற்றுக்கட்சியினருக்கு பாதுகாப்பு தரப்படவில்லை என்றும் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருப்பது நீதிபதிகள் மட்டுமே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தமிழக முதல்வர் கண்டனம்

தமிழக அரசை பலவீனப்படுத்தும் செயல்களில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது என்று தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தனித்துப் போட்டியிட விரும்பினால், அ. தி. மு. க. அதைப்பற்றிக் கவலைப்படாது என்றும் அவர் மேலும் கூறினார்.

அ. அ. தி மு. க. — காங்கிரஸ் கூட்டணி ஒருவழிப் பாதையாக அமையமுடியாது. கூட்டணிக்கு காங்கிரஸ்கட்சி பேச்சளவில்தான் ஆதரவு தெரிவிக்கிறது என்றும் தமிழக அரசை குறை கூறுபவர்களை அது ஆதரித்து வருவதாக மேலும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ரி)

# சட்டம் ஒழுங்கு முழுவதும் சீர்குலைந்துவிட்டது

## சுவாமி நடவடிக்கைஎடுக்க கோரிக்கை

[சென்னை]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முழுவதுமாக சீர்குலைந்துவிட்டது என்றும் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் பீஷ்மநாராயணசிங்கிடம் சுப்பிரமணியசுவாமி மீண்டும் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக சுப்பிரமணிய சுவாமியும் தமிழக ஜனதா கட்சியின் தலைவரை சந்தித்தார்.

இரு தினங்களுக்கு முன்பு தானும் சந்திரலேகாவும் மதுரை சென்றிருந்தபோது அங்கு தங்களைதாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார். (ரி)

## போட்டி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கோட்டபாடசாலை மாணவர்களுக்கிடையேயான 'திருவெம்பாவை முற்றோதல்' மனனப் போட்டி இன்று 28-ந் திகதி திங்கட்கிழமை காலை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (139)

## கிருபானந்த வாரியார் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

'அருள்மொழியரசு' திருமுருக கிருபானந்தவாரியார் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ந் திகதி இலங்கை வருகிறார்.

ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் தொடர்ந்து பத்து தினங்களுக்கு கிருபானந்த வாரியாரின் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை 2,340 பக்கங்களில் ஆறு தொகுதிகளாக தொகுக்கப்பட்டிருக்கும் முருகக்கடவுளின் பாடல்கள் அடங்கிய புத்தகத் தொகுதிகளையும் திருமுருக கிருபானந்தவாரியார் வெளியிட்டு வைப்பார். (கி)

# சந்திரலேகா மீது 'அசிட்' வீச 12 லட்சம் ரூபா பேரம்!

(சென்னை)

முன்னாள் தமிழக ஐ. ஏ. எஸ். அதிகாரியான திருமதி சந்திரலேகா மீது 'அசிட்' வீசுவதற்கு சுமார் 12 லட்சம் ரூபா பேசப்பட்டது எனவும் அதில் முற்பணமாக 30,000 ரூபா பெறப்பட்டதாகவும் இந்த 'அசிட்' வீச்சு சம்பவம் தொடர்பாக கைதான ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஏற்பாட்டின் பேரில் இந்த அசிட்வீச்சு நடைபெற்றதெனவும் இதற்காக பம்பாயிலிருந்தும் ஒருவர் தருவிக்கப்பட்டதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்திரலேகாவின் முகத்தை 'அசிட் வீசி' சேதப்படுத்துமாறும் அது தவறும் பட்சத்தில் அவரது முகத்தை கத்தியால் குத்தி கிழித்து சேதப்படுத்துமாறும் இச்சம்பவத்தில் ஈடுபட்ட மூவருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாம்.

சந்திரலேகா காரில் வரும்போது அவர்மீது அசிட் வீசித் தாக்கிய பம்பாயைச் சேர்ந்த இளைஞர் பொதுமக்களால் துரத்திப்பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதும் தெரிந்ததே. (சி)

# தாயகம் திரும்பியோர் மீளக்குடியமர்வு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வந்த அகதிகளில் ஐம்பது வீதமானோர் மீளக் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

15216 அகதிகள் வவுனியா, திருகோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளில் தற்போதுவசித்து வருகின்றார்கள். 210 பேர் உறவினர்கள் வீடுகளிலும், 259 பேர் முகாம்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் டாக்டர் விமரசேகரா கூறியுள்ளார்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை இந்தியாவில் இருந்துவந்த அகதிகள் 1,281 குடும்பங்களை கொண்ட 29203 பேர் இலங்கைக்கு வந்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## புதிய டாக்டர் பொறுப்பேற்றார்

[நெல்லியடி]

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் பிரெஞ்சு வைத்தியக் குழுவின் புதிய சத்திர சிகிச்சை நிபுணராக ஆஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த டாக்டர் அபெல் கடந்த 24ம் திகதிமுதல் கடமையேற்றுள்ளார். (260)

# ஜனதா கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது

(சென்னை)

சுப்பிரமணியம் சுவாமியின் ஜனதா கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தக் கட்சியின் மாநில நிர்வாகிகள் சிலர் இக்கட்சியிலிருந்து விலகி அ. தி. மு. கவில் இணைந்துள்ளனர்.

தி. மு. கவிற்கு ஆதரவு அளிப்பது போல சுவாமியின் நடவடிக்கை அமைந்துள்ளன என்றும் அ. தி. மு. க அரசுக்கு எதிரான பொய்யான பிரசாரத்தில் சுவாமி ஈடுபட்டுள்ளார் என்றும் ஜனதாகட்சியின் அதிருப்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

1993ம் ஆண்டு முதல் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு ஆண்டு 6, 7, 8 வகுப்புகளில் விஞ்ஞானம், சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களில் கடல்வளம்சார் கல்வி அறிமுகப்படுத்தும் தீர்மானத்துக்கு அமைவாக மேற்படி பாடங்களை பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று மு. ப. 8-30 முதல் பி. ப. 4-30 வரை பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளது.

யாழ் இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி. (158)

★

(யாழ்ப்பாணம்)

ஏழாம் நாள் அட்வென்டிஸ் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நத்தார் புதுவருட நிகழ்ச்சிகள் "ஒளிவிழா" நடைபெறும்.

# பத்திரிகையாளர்களுக்கு வீடமைப்பு கடன் திட்டம்

(மானிப்பாய்)

நாட்டிலுள்ள சகல பத்திரிகையாளர்களுக்கும் வீடு கட்டுவதற்கான விசேட கடன் வழங்குவதற்கான திட்டமொன்றை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறீசேன கூரே அண்மையில் ஆரம்பித்துவைத்துள்ளார்.

இதற்கான கடன்கள் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் ஊடாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றை பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள், செய்தி உதவியாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், ஆசிரியர் பீட உதவியாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள், பத்திரிகை தொலைக்காட்சி ஆசிரியர்கள், பத்திரிகையைச் சேர்ந்த ஏனையோரும் இக்கடன்களைப் பெற முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 25,000 ரூபா முதல் 150,000 வரையிலான கடன்களுக்கு இரண்டு வீத வட்டி அறவிடப்படும். 1,50,000க்கு மேற்பட்ட கடன்களைப் பெறுபவர்களுக்கு வட்டி வீதம் மாறுபடுமென்றும் இதற்கு விண்ணப்பிப்போர் சிறிய சேமிப்பு காப்புறுதி திட்டமொன்றில் இணைந்துகொள்ளவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (71)

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரேமா வெற்றி பெறுவார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவே வெற்றி பெறுவார் என்று 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தேர்தலில் பிரேமதாசா வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றபோதிலும் கண்டலம ஹோட்டல் விவகாரம் அத்த கார்ட்டுனிஸ் தாக்குதல், கொழும்பு பல்கலைக்கழக மாணவருக்கு எதிராக எடுத்த நடவடிக்கை தமிழ் முஸ்லிம் விரிசல்கள் போன்ற சம்பவங்களால் அவரது செல்வாக்கு குறைந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு கட்டியம் கூறுவதுபோல் ஜனவரி 2ம் திகதி ஜனாதிபதி பதவியேற்ற 4வது ஆண்டு நினைவு விழா சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது என்றும் அவர் கூறினார். (சு)

# 'தமிழோசை' வீடியோ நாடா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முல்லை. மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'தமிழோசை' வீடியோ ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா ஜனவரி 1-ந் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனு ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்கள்.

வரவேற்புரையை முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் சங்கரும், வெளியீட்டுரையை முல்லை. அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பனும் நிகழ்த்துவார்கள்.

தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் கலைஞர்களை கௌரவிப்பார்.

மூத்த உறுப்பினர் திரு. தேவர், நிதர்சனப் பொறுப்பாளர் திரு. இ. பரதன், வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மனோ ஆகியோர் சிறப்புரை நிகழ்த்த திரு. செம்பியன் செல்வன், திரு. ந. அருணாசலம், காலநிதி சோ. கிருஷ்ணராசா ஆகியோர் மதிப்புரை நிகழ்த்துவர். (ரி)

# அ.தி.மு.க. உறவை முறித்தால் காங்கிரஸ் கவலைப்படாது

## வாழப்பாடி அறிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் தற்போது காங்கிரஸ் (ஐ) அ. தி. மு. க. உறவை முறித்துக் கொள்ள அ. தி. மு. க. விரும்பினால் தாராளமாக செய்துகொள்ளலாமெனவும், இதற்காக காங்கிரஸ் (ஐ) வருந்தாதெனவும் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அ. தி. மு. க. பொதுக்குழு, தீர்க்கப்பட்ட பிரச்னைகள் மீது தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பது அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது. பொதுக்குழு உறுப்பினர்கள் முதல்வரின் கவனத்தை கவர்வதற்கு இப்படி பேசினார்களா அல்லது செல்வி ஜெயலலிதா தூண்டிவிட்டு இப்படிப் பேசினார்களா எனத் தெரியவில்லை.

காங்கிரஸ் கட்சியையும் அதன் தலைமையையும் அ. தி. மு. க. விரசமாக விமர்சித்திருப்பது கண்டனத்திற்குரியது. தமிழகத்தில் இராணுவம் வந்ததற்கான காரணத்தை பிரதமர் கூறிவிட்டார். இருகட்சி உறவுக்கும் குறுக்காக எவரும் வரமுடியாதெனவும் பிரதமர் கூறிவிட்டார். மேலும் பிரதமரும் செல்வி ஜெயலலிதாவும் பல வேறு பிரச்னைகள் குறித்தும் ஆராய்ந்து அவர் திருப்தியடைந்த பிறகு இப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றியது அரசியல் நாகரீகமாகாது.

தி. மு. க. அரசை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து வாதாடியது அ. தி. மு. க. தான். இந்த பதவி நீக்கமும் அரசியல் சாசனத் திற்கேற்பவே எடுக்கப்பட்டது என்றும் கூறினார். (சி)

## குழந்தைகளுக்கு 50 ரூபா பெறுமதியான 2 உணவு முத்திரைகள்

(கொழும்பு)

உணவு முத்திரையைப் பெறும் குடும்பங்களில் உள்ள ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு, 50 ரூபா பெறுமதி வாய்ந்த இரண்டு உணவு முத்திரைகள் அடுத்த ஆண்டிலிருந்து அரசு வழங்கவுள்ளது.

இதற்கென அரசாங்கம் எதிர்வரும் ஆண்டில் 305 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

குழந்தையின் பிறப்புச் சான்றிதழுடன், பிரதேசச் செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (சு)

### இன்று

(யாழ்ப்பாணம்)

புனித மரியாள் பாடசாலையில், நளா கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப. 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

### முன்னோடிப் பரீட்சை முடிவு

(வட்டுக்கோட்டை)

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தினால் கடந்த அக்டோபர் மாதம் நடாத்தப்பெற்ற க. பொ. த. சாதாரணதர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையின் பெறுபேறுகள் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் முதலாம் தவணையிலேயே க. பொ. த. உயர்தர வகுப்புக்கு அனுமதிக்கப்படவுள்ளனராம். (139)

### மூப்பனூர் - வாழப்பாடி கோஷ்டி தகராறு

## பொலிஸ் பாதுகாப்பில் இ. காங்கிரஸ் அலுவலகம்

(மதுரை)

மதுரை புறநகர் மாவட்ட இ. காங்கிரஸ் கட்சி சார்பில் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பாக மூப்பனூர், வாழப்பாடி கோஷ்டிகளுக்கிடையில் தகராறு ஏற்பட்டது.

இதனால் இப்பகுதியிலுள்ள இ. காங்கிரஸ் கட்சி அலுவலகத்தை இருதரப்பினரும் பூட்டுகள் போட்டு பூட்டிவிட்டனர்.

தற்போது இக்கட்சி அலுவலகம் பொலிஸ் பாதுகாப்பிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

### யுத்த ஏற்பாடுகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான வசதிகளை பெருமளவில் அதிகரிப்பதற்குமான முயற்சிகளில் தற்போது கூடுதல் அக்கறை காட்டி வருவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

### பி. ஜே பி. எம்- பி.க்கள்

(1-ம் பக்க தொடர்ச்சி)

பினர்கள் எவரும் பதவியில் இருந்து விலகமாட்டார்கள் என பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், லோக்சபாவை கலைத்துவிட்டு உடனடியாக இடைத்தேர்தலை நடாத்துமாறு பாரதீயஜனதாக்கட்சி தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும் என்றும் மத்திய அரசால் அண்மையில் கலைக்கப்பட்ட 4 மாநிலங்களிலும் உடனடியாக இடைத்தேர்தலை நடாத்துமாறு பாரதீய ஜனதாக் கட்சி கேட்டுக்கொள்ளும் என்றும் தெரிவித்தார். (க)

### கிரிக்கெட்:

## தென்னாபிரிக்கா 3 - 163

(ஜொகனஸ்பேர்க்)

இந்திய - தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ம் நாள் தென் ஆபிரிக்க அணி தேநீர் இடைவேளைவரை 3 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்களைப்பெற்றது.

முதலில் ஆடிய இந்திய அணி 1வது இனிங்ஸில் 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அஸாருதீன் 60 ஓட்டங்களை பெற்றார். (சி)

## கடவுச்சீட்டு வழங்கியதில் ரூ. 35 கோடி வருமானம்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் இந்த வருடம் நவம்பர் மாதத்துக்கிடையில், கடவுச் சீட்டு வழங்கியதன் மூலம் 35 கோடி 38 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு 1 லட்சத்து 90 ஆயிரம் கடவுச் சீட்டுக்களும், ஏனைய நாடுகளுக்கான கடவுச் சீட்டுக்கள் 72 ஆயிரமும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களினால், 7 கோடி ரூபா வருமானம் பெற்றுள்ளதென குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் வால்டர் பெரேரா தெரிவித்துள்ளார். (சு)

### கோரிக்கை

(வேலணை)

வடமாகாணத்தில் தற்போது இயங்கி வருகின்ற சர்வதேச பரியோவான் முதலுதவிச் சங்கத்திலும் படைப்பிரிவிலும் உள்ளவர்கள் 1993ம் ஆண்டில் இருந்து புதிய யாப்பின் பிரகாரம் ஒவ்வொரு அங்கத்தவர்களும் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வதுடன் தமது பிரிவுகளையும் புதிதாக, எதிர்வரும் 31-ம் திகதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்துகொள்ளத் தவறும் பிரிவுகளும், அங்கத்தவர்களும் தொடர்ந்து சர்வதேச பரி. யோவான் முதலுதவிச் சங்கத்திலோ அல்லது படையிலோ இருக்கமுடியாது எனப் பிரதி மாகாண ஆணையாளர் திரு. நா. போஜன் தெரிவித்துள்ளார். (75)

### கண்ணிவெடி

## அரச அதிபரும் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் மட்டு மாவட்ட மேலதிக அரச அதிபர் வை. அகமது லெப்பையும் ஓட்டமாவடி உதவி அரசாங்க அதிபர் உதுமான் லெப்பையும் மற்றும் நால்வரும் உயிரிழந்துள்ளனர்.

மகாவலி திட்டத்தின்கீழ் வரும் 'பி' குடியேற்றத்திட்டத்தை பார்வையிடசென்றபோது மீயான் குளத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாம். (சி)

## சோமாலியாவில் உள்நாட்டுப்போர் முடிவிற்கு வருகிறது

(மொஹாபிசோல்)

சோமாலியாவில் தமக்குள் போராடி வந்த இரண்டு குழுக்கள் நேற்றுச் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டதன் மூலம், கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போர் ஒரு முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யு. எஸ். சி. எனப்படும் போராளிக் குழுவின் தலைவர் மொகமட் பாரா ஹைதியும், எஸ். பி எம். அமைப்பின் தலைவர் அலிஹமாதி முகமட்டும் அமெரிக்கத் தூதரகத்தில் வைத்து இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இரண்டு குழுக்களும் தத்தம் ஆயுதங்களைக் களைவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இதே வேளை சோமாலிய அகதிகளுக்கு உதவி வழங்கச் சென்ற அமெரிக்கப் படைகளைப் பார்வையிடுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி திரு: ஜோர்ஜ் புஷ் சோமாலியா செல்லவுள்ளார். ஜனாதிபதி என்ற முறையில் இவர் மேற்கொள்ளும் கடைசி வெளிநாட்டு இறுதி விஜயம் இதுவாகும். (க)

### வன்னி மாவட்டத்தில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்று இம்மாவட்டத்தைச் சேர்ந்த கட்டுப்பொத்த என்ற இடத்தில், புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க-சி)

### வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்திகள் வெளிவந்த போதும் அதனை இரு தரப்புமே மறுத்துவிட்டன.

இந்த கொடூரமான வன்முறைப்போருக்கு தீர்வு என்பது இன்னமும் ஓர் கனவாகவே இருப்பது மனதுக்கு விரக்தியும் சோர்வும் தரும் விடயமென பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

### அகதி முகாம்களில் ஆய்வு

(வட்டுக்கோட்டை)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிமுகாம்களுக்குச் சென்று சுகாதாரம், போஷாக்கு பற்றி ஆய்வு நடத்தியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தை சேர்ந்த 24 மாணவ மாணவிகள் இந்த ஆய்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். (139)

## மதுபான விற்பனை சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மதுபான விற்பனையில் ஈடுபட்டுள்ள அனைவரும், 1993ம் ஆண்டிற்கான மதுபான விற்பனை அனுமதிச் சான்றிதழை விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அனுமதிச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் நாளை தொடக்கம் 5-1-93 வரை யாழ். கந்தர்மடத்தில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப் பத்திரமின்றி, மதுபான விற்பனையில் ஈடுபடுவதற்கு இசைவளிக்கப்படமாட்டாது.

### அடுத்து வரும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மேலாதிக்கம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே அரசு விரும்பும் தீர்வுக்கு புலிகளை தள்ள முடியுமென இராணுவ தரப்பினர் உணர்கின்றனராம்.

மேலும் அண்மைக் கால யுத்தத்தில் இராணுவத்தினர் என்றுமில்லாத மிகப்பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருவதன் மூலம் கீழ்மட்ட சிப்பாய்கள் படையிலிருந்து தப்பி ஓடுவதை தடுக்க விரைவில் மிகப்பெரும் படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு அதில் பெரும் வெற்றியை பெற வேண்டுமெனவும் இராணுவம் தீவிரமாக இருந்து வருவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

### அரசு தரப்பாலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள வேளையில், அந்த அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் தொண்டமான் வடக்கு-கிழக்குஇணைப்பை வலியுறுத்தி தெரிவுக் குழுவிலிருந்து வெளியேறியிருப்பது அரசுத் தரப்பில் பலருக்கும் எரிச்சலை ஊட்டியுள்ளதாம்.

இதனால் அமைச்சர் பதவியில் இருந்து அவரை விலக்க வேண்டும் அல்லது அவராகவே அப்பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும் பலர் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனராம். (சி)

### தமிழ் கட்சிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. தொண்டமான் விலகியது பற்றியும் தெரிவுக் குழுவில் தங்களது நிலைப்பாடுகள் குறித்தும் இவர்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனராம்.

தெரிவுக் குழுவின் அடுத்த நடவடிக்கையை பொறுத்தே தெரிவுக் குழுவில் தொடர்ந்தும் இருப்பதா அல்லது விலகுவதா என முடிவு செய்யப்படுமெனவும் தமிழ் கட்சிகள் அமைச்சரிடம் கூறியுள்ளனராம். (சி)

### தேர்தல் கூட்டிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரக்கட்சி செயற் குழுவில் அதில் அங்கம் வகிக்கும் அனைவரும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் எதிர்வரும் தேர்தல் பற்றியும் அதில் எதிரணிகளின் கூட்டு பற்றியுமே முக்கியமாக ஆராயப்பட்டதாம்.

இதேவேளை இ. தொ. கா. வில் இருந்து வெளியேறிய ஆசிரக்கணக்கானோர் லலித்-காமினிகட்சியில் இணைந்துள்ளதால், இவர்களது கட்சியின் பலம் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (சி)

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்திகளை பெற்றுள்ளனர்.

இம்முறை பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு தகுதிபெற்றவர்கள் எண்ணிக்கை 54 937 ஆகும். 41.7 சதவீதமானோர் இந்தவருடத்தில் சித்தியடைந்துள்ளனர். சென்ற வருட விகிதம் 35 ஆக இருந்தது.

26 ஆயிரம் மாணவர்கள் கலைப் பிரிவில் சித்தி அடைந்திருக்கிறார்கள்.

கொழும்பு றோயல் கல்லூரியில் 16 மாணவர்கள் நான்கு பாடங்களில் 4ஏ சித்தி அடைந்திருக்கிறார்கள். இரண்டாவது இடம் அம்பலாங்கொடை தர்ம அசோக வித்தியாலயத்தில் 9 மாணவர்கள் நான்கு பாடங்களில் 4 ஏ எடுத்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலங்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8